நாம் நன்றியோடு நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம் மிகுந்த எச்சரிக்கையோடும் மனிதாபிமானத்தோடும் அரசியல் சாதுரியத்தோடும் இலங்கைத் தமிழர்களின் இன்னல் காத்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், இந்தப் பிரச்சினையின் உச்சக் கட்டத்தில் அரசியல் எதிர்ப்புகளுக்கு அப்பாற்பட்டு, பாரதப் பிரதமரோடு இணைந்து நின்ற முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், சிறப்பாக அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு குறுகிய அரசியல் வட்டத்திற்குள் நில்லாமல் மிகுந்த தொலை நோக்கோடு மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு தார்மீக ஆதரவு தந்து இந்தச் சூழ்நிலையை உருவாக்கிய தமிழகத்தினுடைய இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த மூன்று இந்தியப்பெருங்குடி மக்களையும் தமிழ்ச் சமுதாயம் நன்றியோடு நினைத்துக் கொள்ளும். நன்றியோடு நினைத்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பேச்சு வார்த்தை நல்லமுறையில் நடந்து வெற்றியடைய வேண்டுமென்று இந்த அவை தங்கள் மூலமாக இலங்கையினுடைய ஜனாதிபதிக்கும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் ஒரு வாழ்த்துச் செய்தியை உங்கள் மூலமாக அனுப்ப முடியுமா என்கிற கோரிக்கையை எங்கள் சார்பாக உங்கள் முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றாக இணைத்து நன்றி தெரிவித்ததற்கும், வாழ்த்துத் தெரிவித்ததற்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு, தங்கள் கோரிக்கையை இந்த அவை கவனத்தில் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து ஏற்கெனவே நாம் முடிவெடுத்தபடி காலையிலும் மாலையிலும் நாம் சட்ட மன்றத்தில் இருக்கப் போகிறோம் என்பதை நான் உங்களுக்கு கவனமூட்ட வேண்டும். எனவே இப்போது நேரடியாக அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்த கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்படும்.

(4) கவன ஈர்ப்பு.

(அ) தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டியிலுள்ள ''தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலை'' மூடப்பெற்றிருப்பது குறித்து.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே; ''தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டம்பட்டியில் உள்ள தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலை 1983 ஆம் ஆண்டு முதல் மூடிக்கிடப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1989 ஏப்ரல் 41

அறிக்கை.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் சுமார் 400 தொழிலாளர்கள் பணி செய்தார்கள். பொருளாதார நெருக்கடி காரணமாக இந்நிறுவனம் 15-6-1983-க்குப் பிறகு செயல்படவில்லை. இந்நிறுவனம் யூகோ வங்கிக்கு வட்டியுடன் சேர்த்து சுமார் ரூ. 2 கோடி திருப்பித்தர வேண்டியுள்ளது. இத்தொகையை நிர்வாகம் செலுத்தாததால் அவ்வங்கி நிர்வாகத்தின்மீது உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. மேலும் இந்நிறுவனத்தின் சொத்துக்கள் இவ்வங்கிக்கு அடமானத்தில் (Hypothecation) உள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) ஆகிய நிறுவனங்களுக்கு முறையே ரூ. 27 லட்சமும் ரூ. 80 லட்சமும் வட்டியுடன் சேர்த்துக் கட்ட வேண்டிய பாக்கியுள்ளது. இச்சூழ்நிலையில் 'டிட்கோ' இந்நிறுவனத்தை மே, 1984-ல் அதன் பங்குதாரர்கள் (சுமார் 650 பேர்கள்) வசம் ஒப்படைத்ததாகவும், அதன்பிறகு பங்குதாரர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர் என்று நிர்வாகத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இந்நிறுவனம் செலுத்த வேண்டிய கடன் தொகை வட்டியுடன் சேர்த்து ரூ. 3 கோடிக்கு மேல் உள்ளது. இச்சூழ்நிலையில் தொழிலாளர்கள் கோரியுள்ள வேலை நடைபெறா காலத்திற்கான பணம் வழங்க இயலாது. மீண்டும் ஆலையை இயக்க இயலாத நிலையில் உள்ளதால், தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க இயலவில்லை.

சேலம் தொழிலாளர் துணை ஆணையர், தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய நட்ட ஈட்டுத்தொகை மற்றும் பணிக்கொடைத் தொகை ஆகியவைகளைப் பெறுவதற்காக, நட்ட ஈட்டுத்தொகையை பொறுத்தவரை 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டப்பிரிவு 33-சி(2)-ன்கீழ் அரசுக்கு மனுச் செய்து கொள்ளுமாறும் பணிக்கொடைக்காக 1972 ஆம் வருட பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட அதிகாரியின்முன்பு வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெற்றுக் கொள்ளுமாறும்தொழிலாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

***திரு. எம். அண்ணாமலை**: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த ஆலையில் 400 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். அது இன்றைக்கு மூடிக்கிடக்கிறது. 1974 ஆம் ஆண்டு அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த ஆலையை தேசியமயமாக்க வேண்டுமென்று முடிவு

எடுத்தது. மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் மத்திய அரசில் ஜனதாபதி ஒப்புதல் அளிக்காமையால் தாமதப்பட்டு கைவிடப்பட்டதாக அறிகிறேன். இன்றைக்கு மூடிக்கிடக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமைகளை எண்ணிப் பார்த்து இடர்பாடுகள் பலவும் இருப்பினும் இந்த அரசு அந்த ஆலையை மீண்டும் திறக்க முயற்சி செய்யுமா என்று அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த ஆலை கடுமையான நிதிப் பற்றாக்குறை காரணமாக 15—6—1983 லிருந்து மூடப்பட்டிருக்கிறது. இதை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பது பல்வேறு கூறுபாடுகளை எல்லாம் அலசிப் பார்த்து முடிவெடுக்க வேண்டிய ஒன்று. அரசு ஏற்றுக்கொண்டாலும் ஒரு 'வயபின் யூனிட்' டாக கொண்டுவர இயலுமா என்று எண்ணிப்பார்த்துதான், இந்தப் பரிசீலனைக்குப் பின்னால் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகத் தெரிவித்ததற்கு நன்றி. இந்த ஆலை அந்த மாவட்டத்தில் உள்ளபடியே ஒரு பெரிய உருக்கு திறன் கொண்ட உருக்காலையாக அமைந்தது. மூடப்பட்டபோதும் கூட இருந்த யதார்த்த நிலைமை, நல்ல ஆர்டர் இருந்தது. ஆனால் நிர்வாகிகளின் நடவடிக்கையின் காரணமாக, சீர்கேடுகள் உருவாக்கப்பட்டதின் காரணமாக மூடப்பட்டது. அவற்றை எல்லாம் அரசு கருத்தில் கொண்டு பின்தங்கிய இப்பகுதியில் அந்த ஆலையை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய பெரிதும் ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

(ஆ) திருவாரூர் மருத்துவமனைக்குத் தண்ணீர் இணைப்பு வழங்கப் பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு. வி. தம்புசாமி அவர்களுக்குப் பதிலாக திரு. கோ. வீரையன் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.